சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – அறிவிப்பு – கிராமப்புர மற்றும் நகர்ப்புரங்களில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் வீடு வழங்குவது – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்:24 நாள்:12.8.2022.

சுபகிருது, ஆடி 27.

திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு, நாள் 21.04.2022.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க.எண்.1575/ மா.தி.ந/2022, நாள் 22.04.2022.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், ந.க.எண்.ஜி1/5342/2013, நாள் 12.05.2022
4. இயக்குநர் (மு.கூ.பொ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, ந.க.எண்.28828/2022/RHS-2.1, நாள் 10.06.2022.

******

<u>ஆணை:</u>

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடரில், 21.04.2022 அன்று மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> **"கிராமங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் வீடு வழங்க கோரியும், நகரங்களில் தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு வழங்க கோரியும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016-ல் பிரிவு 37 (a)-ல் வலியுறுத்தியுள்ளதன் அடிப்படையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படை தேவையான வசிப்பதற்கு வீடு அமைத்துக்கொள்ளும் பொருட்டு கிராமங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் வசித்துவரும் 40 % மற்றும் அதற்கு மேல் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் மருத்துவ சான்று மற்றும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை (UDID) பெற்றிருப்பதை கட்டாயமாக்கி எவ்வித நிபந்தனையுமின்றி மாற்றுத் திறனாளிகளை உறுப்பினர்களாக கொண்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக வீடு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மேலே மூன்றாவது மற்றும் நான்காவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகியோடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல்களின் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

(i) கிராமப்புரங்கள் மற்றும் நகர்ப்புரங்களிலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு விதிமுறைகளுக்குட்பட்டு மொத்த ஒதுக்கீட்டில் 5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும்.

(ii) மாற்றுத் திறனாளிகளுக்கான வீடு ஒதுக்கீட்டில் போதுமான மாற்றுத்திறனாளிகள் இல்லாத பட்சத்தில், அவ்வீட்டினை இதர விண்ணப்பதாரர்களுக்கு வழங்கலாம்.

(iii) மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்படும் வீடுகள், அவர்கள் எளிதில் அணுகும் வகையில் தங்கு தடையற்ற சூழல் ஏற்படுத்தி தரவேண்டும்.

(iv) அடுக்குமாடி குடியிருப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு தரைத்தள குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3ல் தெரிவித்துள்ளவாறு கிராமப்புரம் மற்றும் நகர்ப்புரங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் தகுதியுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி, (மற்றும்) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக வீடு ஒதுக்கீடு செய்யப்படுவதினை கண்காணிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை – 15
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், காமராசர் சாலை, சென்னை-5.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி / வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சித்துறைகள், சென்னை-9.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர், அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அவர்களின்சிறப்பு நேர்முக உதவியாளர் சென்னை-9.
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 17/8/22
17/8/22